©
தமிழ்நாடு அரசு
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 37] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 28, 2011
புரட்டாசி 11, திருவள்ளுவர் ஆண்டு – 2042

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 43, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, 17 பிப்ரவரி 2011.]*

**தமிழ்நாடு 1966–ஆம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) விதிகளில் திருத்தம்.**

தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1965) 25ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) விதிகளில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்:–

**திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில் 11–ஆம் விதியில் வரும் அட்டவணைக்குப் பதிலாக பின்வரும் அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

| *தொ. எண்.* | *வகைப் பாடு* | *கட்டடத்திற்கான செலவு* | *பொறியாளர்களின் கல்வித் தகுதி* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1 | நிலை–III | ரூ. 6.00 இலட்சத்திற்கும் மேற்படாத செலவில் கட்டப்படும் கட்டடங்கள் | இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் அல்லது வெளிநாட்டில் உள்ள பல்கலைக் கழகத்தில் கட்டடப் பொறியாளராக இருத்தல் அல்லது பொறியாளர்களுக்கான அமைப்பில் (இந்தியா) அல்லது கட்டமைப்புப் பொறியாளர் அமைப்பு (லண்டன்) கட்டுமானப் பொறியாளர் அமைப்பு (லண்டன்) கட்டுமானப் பொறியாளர்களுக்கான அமெரிக்க சங்கம் போன்ற வெளிநாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைத் தொழில் கல்வியாளர் சங்கம் ஆகியவற்றின் கூட்டாண்மை உறுப்பினராக இருத்தல், அதே போன்ற தகுதியையும் பிற தகுதிகளையும் பெற்று கட்டடக் கட்டுமானப் பணியில் ஐந்தாண்டுகளுக்குக் குறையாத அனுபவத்துடன், தமிழ்நாடு அரசு அவ்வப்போது அங்கீகரிக்கக் கூடிய தகுதிகள் பெற்றிருத்தல் அல்லது மாநில தொழில் நுட்பக் கல்விக் குழுமத்தால் வழங்கப்படும் கட்டுமானப் பொறியாளருக்கான பட்டயப் படிப்பை முடித்தவராக இருத்தல் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள கிண்டி பொறியியல் கல்லூரியின் கீழ்நிலையில் சார் பணியாளர் பட்டயம், அல்லது மேல்நிலை சார் பணியாளராகப் பயிற்சி பெற்றல் அல்லது கட்டட கட்டுமான பணியில் ஐந்து ஆண்டுகளுக்கும் குறையாத அனுபவத்துடன் அதற்கிணையான கல்வித் தகுதி பெற்றிருத்தல். |

| தொ. எண். (1) | வகைப் பாடு (2) | கட்டடத்திற்கான செலவு (3) | பொறியாளர்களின் கல்வித் தகுதி (4) |
|---|---|---|---|
| 2 | நிலை—II | செலவு ரூ. 6.00 இலட்சத்திற்கும் மிகாத அளவில் ஆனால் ரூ. 20.00 இலட்சத்திற்கும் மேற்படாத செலவில் கட்டப்படும் கட்டடங்கள் | இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் அல்லது வெளிநாட்டில் உள்ள பல்கலைக்கழகத்தில் கட்டடப் பொறியாளர் பட்டம் பெற்ற பொறியாளராக இருத்தல் அல்லது பொறியாளர்களுக்கான அமைப்பில் (இந்தியா) அல்லது கட்டமைப்புப் பொறியாளர் அமைப்பு (லண்டன்) கட்டுமானப் பொறியாளர் அமைப்பு (லண்டன்) கட்டுமானப் பொறியாளர்களுக்கான அமெரிக்க சங்கம் போன்ற வெளிநாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட வாழக்கைத் தொழில் கல்வியாளர் சங்கம் ஆகியவற்றின் கூட்டாண்மை உறுப்பினராக இருத்தல் மற்றும் அதே போன்ற தகுதிகளையும் பிறதகுதிகளையும் பெற்று, கட்டடக் கட்டுமானப் பணியில் ஐந்தாண்டுகளுக்குக் குறையாத அனுபவத்துடன், தமிழ்நாடு அரசு அவ்வப்போது அங்கீகரிக்கக் கூடிய தகுதி பெற்றிருத்தல் அல்லது மாநில தொழில் நுட்பக் குழுமத்தால் வழங்கப்படும் கட்டடப் பொறியாளருக்கான பட்டயப் படிப்பை முடித்தவராக இருத்தல் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள கிண்டி பொறியியல் கல்லூரியின் கீழ்நிலையில் சார்நிலைப் பணியாளர் பட்டயம் அல்லது மேல்நிலை சார்நிலைப் பணியாளர் பயிற்சி பெற்றல் அல்லது கட்டட கட்டுமானத்தில் பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்துடன் அதற்கிணையான கல்வித் தகுதி பெற்றிருத்தல். |
| 3 | நிலை—I | ரூ. 20.00 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆனால் ரூ. 50.00 இலட்சத்திற்கும் மேற்படாத செலவில் கட்டப்படும் கட்டிடங்கள் | இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் அல்லது வெளிநாட்டில் உள்ள பல்கலைக்கழகத்தில் கட்டுமானப் பொறியாளர் பட்டம் பெற்ற பொறியாளராக இருத்தல் அல்லது மேலே இனம் (2)—ல் குறிப்பிட்டுள்ளபடி பொறியாளர்களுக்கான அமைப்பில் (இந்தியா) அல்லது வெளிநாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைத் தொழில் கல்வியாளர் சங்கத்தில் கட்டடங்கள் கட்டுமானப் பணியில் பத்து ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்துடன் கூட்டாண்மை உறுப்பினராக இருத்தல் அல்லது கட்டடக் கட்டுமானப் பணிகளில் ஐந்தாண்டுகளுக்குக் குறையாத, அனுபவத்துடன் முதுநிலைப் பட்டம் பெற்றிருத்தல் ஆகியன. |
| 4 | நிலை—I-A | ரூ. 50.00 இலட்சத்திற்கும் அதிகமான செலவில் கட்டப்படும் கட்டிடங்கள் | இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் அல்லது வெளிநாட்டில் உள்ள பல்கலைக்கழகத்தில் கட்டுமானப் பொறியாளர் பட்டம் பெற்ற பொறியாளராக இருத்தல் அல்லது மேலே இனம் (2)—ல் குறிப்பிட்டுள்ளபடி பொறியாளர்களுக்கான அமைப்பில் (இந்தியா) அல்லது வெளிநாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைத் தொழில் கல்வியாளர் சங்கத்தில் கட்டிடங்கள் கட்டுமானப் பணியில் பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவத்துடன் கூட்டாண்மை உறுப்பினராக இருத்தல் அல்லது கட்டடக் கட்டுமானப் பணியில் ஐந்தாண்டுகளுக்குக் குறையாத அனுபவத்துடன் முதுநிலைப் பட்டம் பெற்றவராக இருத்தல் ஆகியன. |

**கே. அசோக்வர்தன் ஷெட்டி,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ச. கருத்தையா பாண்டியன்,**
*அரசுச் செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.